★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆனி 22உ வியாழன் (5—7—56) ★ ★ வெளியூர்: ஆனி 23உ வெள்ளி (6—7—56) [இதழ் 18

திபேத் சுதந்திர நாடாகும்— லாமாக்களின் உறுதி!

திபேத் நாட்டை ஒரு சுதந்திர நாடாக உருவாக்கத் தாங்கள் உறுதி பூண்டிருப்பதாய் தலைலாமா, பஞ்சன்லாமா ஆகிய திபேத்திய தலைவர்கள் தெரிவித்திருப்பதாக பீகிங் வானொலி அறிவித்துள்ளதாம்.

சீன கம்யூனிஸ்டு கட்சியின் 80-ம் ஆண்டு தவக்கவிழாவை ஒட்டிய நிகழ்ச்சியின்போது, லாமாக்களின் உறுதிமொழி, தந்தி மூலம், சேர்க்குடியரசுத் தலைவர் மாசே-துங்கிற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

வெகு சீக்கிரத்திலேயே திபேத், சுதந்திரப் பிரதேசமாகி விடும் என்றும் வானொலி கூறியிருக்கிறதாம்.

'நீதி வழங்கும் அமைப்பில் பெரும் கோளாறு எதுவும் இல்லை'

'தீவிர சீரமைப்புக்குத் துளியும் இடமில்லை'

'அவசரம் அவசரமாகச் சட்டமியற்றப்படுகின்றன'

'பதினைந்தே தினத்துக்குள் திருத்தமும் செய்யப்படுகின்றன'

'சட்டம் இயற்றும் பயிற்சி பெற்றில்லாததே இதற்குக் காரணம்'

'சட்டத்தை இலகுவாக்குவது கயவர்கள் காப்புப் பெறுவதிலேயே முடிவுறும்'

நீதிபதி பஷீர் அகமத் சையத்தின் தெளிவுரை

திருநெல்வேலி, சூலை 5—

நீதி வழங்கும் முறைபற்றி கூறப்படும் குற்றச்சாட்டின் பொருந்தாமையையும், அம்முறையைத் தீவிரமாக மாற்றி அமைக்கவேண்டும் என்ற முயற்சியில் உள்ள ஆபத்தையும், விதிகளை இலகுவாக்க வேண்டும் என்பதினால் ஏற்படக்கூடிய பலாபலன்களையும், காங்கிரஸ் ஆட்சியாளர் சட்டமியற்றும் அவசரத்தையும் அதனால் விளையும் கேட்டினையும், நியாயம் பெறுவதில் உயர்ந்துவரும் செலவிற்குப் பொறுப்பு யார் என்பதையும் குறித்துத் தெளிவான விளக்கம் தந்துள்ளார், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி பஷீர் அகமத் சையத் அவர்கள்.

"இன்றைய நீதி வழங்கும் ஏற்பாட்டில் ஏதோ கோளாறு இருப்பதாகவும், அதனால் அவ்வேற்பாட்டை முழுதும் திருத்தி அமைக்கவேண்டிய தேவை இருப்பதாகவும் கூறப்பட்டு வருவதை என்னால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. நாட்டின் மாறிய நிலைக்கோப்ப, ஏதாவது சிறு மாற்றங்கள் செய்யப்படவேண்டியது இன்றியமையாததாக இருக்கலாமே அல்லாது, தீவிரமான மாற்றத்திற்கான தேவை எதுவும் இல்லை; எனவே, இருந்து வரும் நீதி வழங்கும் ஏற்பாட்டில் நான் முழு திருப்திகொண்டிருக்கிறேன்.

"பெருத்த பணச் செலவில் நீதி பெறவேண்டியதாக இருக்கிறது எனக் குறை கூறப்படுவதுடன், நீதிமன்றக் கட்டணத்தைக் குறைக்கவேண்டும் என்றும் கூறப்பட்டும் வருகிறது; கட்டணத்தைக் குறைப்பது மாகாண அரசாங்கத்தின் பொறுப்பாகும்; ஆனால், மாகாண அரசாங்கம் என்ன செய்கிறது?

"நீதிமன்றக் கட்டணம் உயர்த்தப்படும் ஒவ்வொரு நேரத்திலும், அத்தகைய உயர்வு தற்காலிகமானது என்றே அரசாங்கம் சொல்லி வருகிறது. ஆனால், ஒரு முறை கட்டணத்தை உயர்த்திவிட்ட பின்னர், மீண்டும் குறைப்பதற்கு அரசாங்கம் உடன்படுவதே கிடையாது.

தனக்குக் கிடைக்கின்ற வருமானத்தில் ஒரு பகுதியைக் குறைத்துக்கொள்ள அரசாங்கம் ஒப்புமானால், நீதி பெறுவதற்காகும் செலவைக் குறைப்பது எளிதாகும். நீதி கோரி அறமன்றங்களுக்கு வருகிறவர்

(4-ம் பக்கம் பார்க்க)

மலேயா தமிழர் சுப்பிரமணியம்

தூக்குத் தண்டனையிலிருந்து அப்பீல் பிரிவுகவுன்சிலில்வழக்கு

கோலாலம்பூர், சூலை 4—

மலேயாவில் தூக்குதண்டனை விதிக்கப்பட்ட தோழர் சுப்பிரமணியம், இப்போது இந்தியாவிற்கு அனுப்பப்படுவார் என்று தெரிய வருகிறது.

இவருக்கு பெடரல் நீதிமன்றம் விதித்த தண்டனையை எதிர்த்து, இந்திய சர்க்கார், பிரிவிகவுன்சிலில் தொடர்ந்துள்ள அப்பில் வழக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டதாகவும் கூறப்படுகிறது.

ஆட்குறைப்பை எதிர்த்து 800 தொழிலாளர் ஆர்ப்பாட்டம்

தாமோதர் திட்ட அதிகாரி 'சிறை'ப்படுத்தப்பட்டார்

கல்கத்தா, சூலை 4—

தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்கள், தங்களில் பலருக்கு வழங்கப்பட்ட ஆட்குறைப்பு நோட்டீசிற்கு எதிராக, ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

சுமார் 800 தொழிலாளர்கள், தாமோதர் கார்ப்பரேஷன் தலைவரான பி. பி. வெர்மா என்பாரைச் சுற்றி வளைத்துச் 'சிறை'ப்படுத்திக்கொண்டு, ஆட்குறைப்பு நோட்டீசுகளைத் திரும்பப் பெறுமாறு வற்புறுத்தியிருக்கின்றனர்.

அந்த அதிகாரி, 'தொழிலாளரின் கோரிக்கைகள் கவனமுடன் பரிசீலிக்கப்படும்' என்ற உறுதிமொழியை வழங்கிய பின்னரே, தொழிலாளர்கள் அவரை விடுவித்து, ஆர்ப்பாட்டத்தை நிறுத்திக் கலைந்து சென்றனராம்.

சென்னை காங்கிரஸ் பாதையில்!

மைசூர் காங்கிரசில் சூறுவளி!

முதலமைச்சரை தொலைக்கக் கையெழுத்துப் போர்

'அமைதியான நீர்மட்டத்திற்குக் கீழ் வாய் பிளந்திருக்கும் முதலைகள்'

காங்கிரஸ் எதிர்ப்பாளர் குறித்து அனுமந்தையாவின் வர்ணனை!

பெங்களூர், சூலை 4—

மைசூர் காங்கிரஸ், தமிழ்நாடு காங்கிரசின் பாதையில் வேகமாக நடைபோடத் துவங்கியுள்ளது.

மைசூர் காங்கிரஸ் கோட்டைக்குள் இப்போது, குத்தும் வெட்டும், குழப்பமும் தலைதூக்கியுள்ளன.

முதன் மந்திரி அனுமந்தையா மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்காக, காங்கிரஸ் சட்டசபை உறுப்பினரிடையே கையெழுத்து இயக்கம் ஒன்று நடைபெறப் வருவது குறித்து ஏற்கனவே செய்தி வந்தது.

இப்போது அந்த இயக்கம் வலுப்பெற்று, பெரும்பாலான காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் கையெழுத்துப் போட்டுவிட்டனராம்.

சட்டசபைக் காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில், நம்பிக்கையில்லாத் தீர்மானம் வரும் என்றும், அதேபோது, அனுமந்தையாமீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானமும் வரவிருக்கிறது என்றும் அதற்கும் ஏற்பாடு நடப்பதாயும் தெரிகிறது.

பிரதேச காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்திலும், நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்து விவாதிக்கப்பட்டதாயும், செயற் குழுவில் கருத்து மேலிடத்திற்குத் தெரிவிக்கப்படும்என்றும்கூறப்பட்டிருந்தது.

இந்த உள்ளடி முயற்சியை அனுமந்தையாவேதான் முதல் முதலில் வெளிவிட்டார்.

தன்னைத் தலைவர் பதவியிலிருந்து நீக்க முயற்சிகள் நடைபெறுவதாக அவர் கடந்த திங்களில் கூறினார்.

"மைசூர் அரசியல் வெளித் தோற்றத்தில் தெரிவதுபோல், சுமுகமானதாக இல்லை; அமைதியான தோற்றத்திற்குக் கீழே, முதலைகள், என்னை விழுங்கக் காத்துக்கிடக்கின்றன" என்றும் அவர் கூறினார்.

கட்டுரவு அடிப்படையில் வேலை செய்துவருகிற வைத்தி சொசைட்டிகள் இன்னும் அதிக இலாபகரமான உற்பத்தி முறையைக் கையாளும் பொருட்டு, 1955—56 கால அளவில், [illegible] விசாரத் தரிசன் உபயோகிக்கக் கொண்டுவரப்பட்டு

ஓட்டர்களாகப் பதிவு செய்துகொள்க!

கோவை [illegible]ாவட்டத்தில், கீழ்க்க[illegible] தொகுதிகளில் வாக்காளர்[illegible] சேர்க்கும் நாள் நீடிக்கப்ப[illegible]டுள்ளது:—

அவினாசி:	1—8—56
கோபி	1—8—56
நம்பியூர்	1—8—56
கொள்ளேகால்:	31—7—56

முன்னர் நீடித்த தொகுதி:

உடுமலை:	26—7—56

பழைய ஏற்பாட்டில் உள்ள தொகுதி:

பொள்ளாச்சி:	16—7—56

'சலுகை' தரத் திட்டம்

திருவனந்தபுரம், சூலை 4—

உத்தியோகம் சம்பந்தமாக திருகொச்சிக்கு வெளியே பேட்டிகளுக்குச் செல்லும் தாழ்த்தப்பட்ட வகுப்பு அபேட்சகர்களுக்கு 'பிரயாணப் படி' தருவதற்கான மானிய உதவித் திட்டத்திற்கு, திரு-கொச்சி சர்க்கார் அனுமதி அளித்துள்ளனர்.

'பெண்களை ஆடுமாடுபோல் பாவித்து நடத்தக் கூடாது'

'சமூகத்தில் உரிய இடத்திற்குப் பெண்களை உயர்த்த வேண்டும்'

'அடுப்படி ஆபரணங்களாகவும் ஆக்கக்கூடாது

திருநெல்வேலி, சூலை 4—

"பெண்களை, ஆடுமாடுகளாகவும், அடுப்படி ஆபரணங்களாகவும் பாவித்து நடத்தக் கூடாது. பெண்கள் கல்வி அறிவு பெற்று, சமூகத்தில் உரிய இடத்தைப் பெறுவதற்கான முயற்சியை நாம் மேற்கொள்ளவேண்டும்.

"பொருளாதாரத் துறையில் பெண்களை, பிறர் கையை நம்பாத சுதந்திரமுடையவர்களாக, ஆக்கவேண்டும். வழக்கறிஞர்களாகவும் நீதிபதிகளாகவும் பணியாற்ற மேலும் பெண்கள் முன்வர வேண்டும்.

"பெண் கல்வியை விரிவாக்குவதின் மூலமே இவ்வனவும் வெற்றி பெறக்கூடும்."

இவ்வாறு, பெண் கல்வியின் சிறப்பை வற்புறுத்தி, சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி பஷீர் அகமத் சையத் அவர்கள், இவ்வூர் வழக்கறிஞர் சங்கத்தினர் அளித்த விருந்தின்போது பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் நாடு
திருகதன இதழ் — ஆசிரியர் இராமநெடுஞ்செழியன்
சென்னை 5—7—'56 வியாழன்

பிடிவாதம் தளருமா?

ஒரு நாட்டின் தன்மான உணர்வு கொண்ட மக்களது உள்ளத்தில் ஊற்றெடுக்கும் தாய்நாட்டுப் பற்று—அதன் அடிப்படையில் பிறக்கும் விடுதலை வேட்கை, அந்த நாடு அடிமை நிலையிலிருந்து மீளுவதற்காக, நெருப்பாற்றிலும் எதிர் நீச்சலடிக்கும் வீரத்தை சிலருக்கேனும் ஊட்டுகின்றன—என்ற உண்மைக்கு, இன்று, நாகநாட்டில் சான்றுகள் ஏராளம் கிடைக்கின்றன.

'விடுதலைக் கிளர்ச்சியை ஒடுக்கியே தீருவோம்' என்ற போர்க் கூச்சலோடு, இராணுவத்தை ஏவி, மிருகத்தனமான அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டிருக்கும் டில்லி ஏகாதிபத்தியத்தின் ஆதிக்க வெறிக்கு எதிராக, நாகர்கள், விடுதலைப் போரில் தொடர்ந்து ஈடுபட்டிருப்பது, நெருப்பாற்றில் எதிர் நீச்சலிடுவதைப் போன்றதுதானே!

நாகர்களில் சிலர் டில்லியின் முடக்குவாதத்தால் தீவிரவாதிகளாக்கப்பட்ட நிலையில், அங்கொன்றும் இங்கொன்றுமாக நிகழ்த்தும் சில பல விரும்பத்தகாத சம்பவங்களைக் காரணமாகக் காட்டி டில்லி சர்க்கார் நாகரின் விடுதலைக் கிளர்ச்சியை அழித்து ஒழிக்க இராணுவ நடவடிக்கை போன்ற கொடிய அடக்குமுறைகளை ஏவியிருப்பதற்கு நியாய உலகத்தின் தலையசைப்பு நிச்சயம் கிடைக்க முடியாது.

நாகர் வாழும் நாகமலைப் பகுதிகளை உள்ளடக்கிய அசாம் மாநிலத்திற்கு அண்மையில் சென்றிருந்தபோது, பண்டித பந்த் பேசியவற்றில் முக்கியமானவைகளை வேறோரிடத்தில் வெளியிட்டிருக்கிறோம்.

'நாகமலைப் பகுதிகளை இந்திய யூனியனோடு இணைத்துக் கொண்டிருப்பதினால், இந்தியாவிற்குப் பொருளாதாரத் துறையிலோ, வேறெந்தத் துறையிலோ இலாபம் ஏதும் இல்லை' என்று பேசுகிறார் — 'உலக சமாதான மணிவிளக்கு-ஆசிய விடுதலை ஒளி விளக்கு'—என்றெல்லாம் வர்ணிக்கப்படும் பண்டித நேருவின் வலக்கரமாயுள்ள மத்திய உள்நாட்டு அமைச்சர் பண்டித பந்த்!

ஆப்பிரிக்காவில் நீக்ரோவ மக்கள் விடுதலைகோரி கிளர்ந்தெழுந்து, கொடிய அடக்குமுறைகளையும் தாங்கிக்கொண்டு விடுதலைப் போர் புரிந்தவண்ணமுள்ளனர். அவர்களுக்கு விடுதலை வழங்க மறுக்கும் வெள்ளை ஏகாதிபத்தியவாதிகளும், பண்டித பந்த் கூறுவதைப போலத்தான் கூறுகின்றனர்—'ஆப்பிரிக்கரை நாங்கள் அடிமை கொண்டிருப்பதால் இலாபம் ஏதும் இல்லை; மாறாக, நஷ்டமடைகிறோம்—அவர்களை நாகரீகமானவர்களாக்க! இதோ, செலவுப் பட்டியல்! ஆப்பிரிக்கர் விடுதலை பெற இன்னும் பக்குவம் அடையவில்லை'—என்றுதான் கூறுகின்றனர்.

இந்த வாதம், ஏகாதிபத்தியத் தந்திரங்களுள் ஒன்று; 'நல்லெண்ண மூலாம் பூசப்பட்ட நஞ்சு' என்று விடுதலை விரும்பிகள் உலகெங்குமிருந்து குரல் கொடுக்கின்றனர். பண்டித நேருவும், நீக்ரோவ மக்களின் விடுதலைக்காக, எத்தனையோ முறை, உயர்ந்து வரும் தனது நிலையை—ஓங்கிவரும் புகழைப் பின்னணியாக வைத்துக் கொண்டு குரல் எழுப்பியிருக்கிறார்.

ஆனால், இதோ, அவரது வலக்கரமாம் பண்டித பந்த், வெள்ளை ஏகாதிபத்தியவாதிகளைப் போலவேகூட அல்ல — அவர்களைவிட ஒருபடி மிஞ்சியே பேசுகிறார்—'இலாபம் ஏதுமில்லை; நஷ்டமேதான்'—என்று!

இலாபமில்லாதது, உண்மையாகக்கூட இருக்கலாம்; ஆனால் அப்படி இலாபமில்லாத ஒரு பகுதியை, ஏன் இவர்கள் டில்லியின் அரவணைப்பிற்குள் வைத்திருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள் என்பதற்கு, இவர்கள் கூறுகிற 'இந்தியாவின் ஒற்றுமை' என்ற போலியான காரணம் போதுமானதல்லவே?

பண்டித பந்தின் பேச்சுக்கள், நாகர்களில் மேலும் பலரைத் தீவிரவாதிகளாக்க உதவுமே தவிர, சிக்கலுக்குப் பரிகாரம் தேட கிஞ்சிற்றும உதவ முடியாது.

'இலாபமில்லை' என்று பேசுவது, 'நமது நாட்டின் வளக்குறைவை ஆட்சியாளர் கேலி பேசுகின்றனர்' என்றுதான் நாகர்களுக்குத் தொனிக்குமே தவிர, 'நமமால் அவர்களுக்கு இலாபமில்லையாம்; ஆனாலும நமமையும் சேர்த்து ஆளுகிறார்களாம்; அதனால் நமக்குததான் இலாபமாம' என்ற எண்ணத்தையா தோற்றுவிக்கும்?

'பாலைவனமோ, தூந்திரப் பிரதேசமோ? பனி படர்ந்த பாறைகள் நிரம்பியதோ? பாசி நிரம்பிய குளங்கள் மிகுந்ததோ? புதரும் — குகையும கொண்ட மலைப் பிரதேசமோ? குப்பையும்—கூளமும் பரவிய மண்மேடோ? அது நாடோ, காடோ? வளமானதோ வறண்டதோ?—அது அல்ல, எங்களுக்கு முக்கியம; நாங்கள் வாழும பகுதி அது; நாங்கள் தனிப் பணபும், பழக்கமும், பாரம்பரியப் பெருமையும, இத்தனைக்கும் மேலாக, தன்மானமும் கொண்டவர்கள்; எனவே, எங்களை நாங்களே ஆண்டுகொள்ள விழைகிறோம; விடுதலை கோருகிறோம; இதில என்ன தவறு இருக்கிறது?'—என்றுதான் எளிதில் சுடச்சுட பதிலளிப்பர், நாகமக்கள்—பண்டிதபந்த் போன்றோருக்கு!

டில்லி ஏவியுள்ள இராணுவத்தின் அசுர பலத்தால்கூட, நாகர்தம் கிளர்ச்சியை ஒடுக்க முடியாது போனதற்கு, பண்டித பந்த் தந்திருக்கும விளக்கம் சரியானதல்ல; அதற்குக் காரணம், நாகர் அனைவரும, ஒரு முகமாக டில்லியின் ஆட்சியை எதிர்க்கின்றனர்—விடுதலை கோருகின்றனர் என்பதாகவே இருக்கமுடியும் என்று நாம் கூறினால், அது முழுவதும் தவறுடையதாகி விடாது. தீவிரவாதிகளாக 2,000 பேர்தான் இருப்பர் என்றால், அவர்களை இந்திய இராணுவம், ஆறு மாத காலத்தில் ஒடுக்கமுடியாது போனது ஆச்சரியததிற்குரியதே!'—என்று, வடநாட்டு இதழ் ஒன்று எழுதியிருப்பதே, நமது யூகத்தை மெய்ப்பிக்கும் வல்லமை கொண்டதாகும்.

கொடிய அடக்குமுறைகளுக்குப் பின்னும், நாகமலையில தொடர்ந்து கேட்கும் முழக்கம், டில்லி பெரிய மனிதர்களின் பிடிவாதத்தைத் தளர்த்த வேண்டுமே, என்பதுதான் நமது கவலையாகும்.

நாகர் கிளர்ச்சியை அடக்கியே தீருவாராம்!

நாக மலைப் பகுதியினால் இந்தியாவிற்கு இலாபமில்லையாம்!

ஆனாலும் தனி அரசுரிமை வழங்க முடியாதாம்

பண்டித பந்த்தின் ஏகாதிபத்தியக் கூச்சல்

'கலவரம் செய்யும் நாகர்களை, அரசாங்கம் கடுமையாக அடக்கும் என்றும், நாக மலைப் பிரதேசத்தில் அமைதியும் ஒழுங்கும் நிலைநாட்டப்படும்' என்றும், இந்திய அரசாங்க உள்நாட்டுத் துறை அமைச்சர் பண்டித பந்த் குறிப்பிட்டுள்ளார்.

'பலாத்காரச் செயல்களில் ஈடுபட்டுள்ள நாகர்களோடு புதிய அரசியல் ஏற்பாடு எதுவும் செய்யும் கேள்வியே எழவில்லை' என்றும் அவர் கூறினார்.

'நாகர்களை எதிர்த்துப் போராடுவது, இராணுவத்தினருக்கு ஒரு தர்மசங்கடமான நிலையை ஏற்படுத்தியிருக்கிறது; அவர்கள் நமது நாட்டில் இருப்பதால், மிகவும் குறைந்த நஷ்டத்துடன் அவர்களை நாம் அடக்க வேண்டியிருக்கிறது; வேறு எதிரிகளாய் இருந்தால், மிக விரைவில் அடக்கி விடலாம்' என்றும் அவர் கூறியுள்ளார்.

"நாகர்கள் தொகை மூன்று இலட்சத்திற்கும் குறைவேயாகும்; ஆகையால், அவர்கள் ஒரு தனி அரசு கேட்பது வெறும் கற்பனையேயாகும்" என்றும், "இந்தச் சிறுபகுதியிலிருந்து இந்தியாவுக்கு எவ்வித அனுகூலமும் இல்லை—ஆனால் இந்தியாவிலிருந்து அப்பகுதி பெறக்கூடிய அனுகூலங்கள் எத்தனையோ உண்டு" என்றும், அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறியுள்ளதாவது:—

"நாகர்கள் தங்கள் பண்பாடு, வாழ்க்கை முதலியவற்றில் முன்னேற உதவிபுரியவே நாம் விரும்புகிறோம். நாட்டின் ஏனைய பகுதிகளைப்போல நாகர் வாழும் பகுதியும் முன்னேற்றம் பெறுவதில் நமக்கு மிகுந்த அக்கறையுண்டு. சிறந்த பண்புகளை வளர்த்துக் கொண்டுள்ள அவர்கள், தற்போது தவறான பாதையில் இழுத்துச் செல்லப்படுகிறார்கள். ஏராளமான நாகர்கள் கொல்லப்பட்டும், சித்திரவதை செய்யப்பட்டுமிருக்கின்றனர்; உயிரோடு தோலை உரிப்பது—ஆணியை உடலில் ஏற்றுவது—சிரச்சேதம் செய்வதுபோன்ற கொடுமைகள் கணக்கு வழக்கின்றி நடந்திருக்கிறது. இந்நிலையில், அவர்களிடையே பாதுகாப்பான வாழ்க்கை நிலையைத் தோற்றுவிக்கப் பணியினை ஏவ வேண்டியவர்களாகவே இருக்கிறோம்.

'நாகர்களில் பலர் முன்னாள் இராணுவ வீரர்களாக இருப்பதாலும், கொரில்லாப் போர் முறையிலமை தேர்ந்தவர்களாயிருப்பதாலும் ஜப்பான் படையெடுப்புக் காலத்திலே கிடைத்த ஆயுதங்களை வைத்திருப்பதனாலும் கலகக்கார நாகர்கள் கை சிறிது பலம் பொருந்தியதாகவே இருக்கும் கத்தி முனையில் பயமுறுத்தி, அவர்கள் பல சாதனைகளையும் பெறுகிறார்கள்.

"நாகர்கள் நம்மவர்களாகவே இருப்பதால் மிகக் கடுமையாக அவர்களை நசுக்கத் திட்டமிட முடியவில்லை. ஒன்றுமறியாத விசுவாசமுள்ள நாகர்களைத் தன்புறமல் காக்கவேண்டுமென்ற நிலையும, அதே சமயததில் நம் நாட்டவர் இரக்கமற்ற முறையில் அடக்கி அழிக்கப்படக்கூடாதென்ற நிலையும, படையினர் நடவடிக்கைக்கு இருவேறு பிரச்சினைகளாய் நிற்கின்றன; எனினும், இவ்விதம் தயங்கியதில் ஒருவாறிருக்க இப்போது படையினர் அங்கு அனுப்பப்பட்டுவிட்டனர். அசாம் போலீசுப் படையினரும் அங்கு பணியாற்றுகின்றனர்.

"நாகர்கள் இந்தியாவின் பகுதி மக்களே என்பதை இனியேனும் உணர்ந்து திருந்துவார்களென்றே இன்னும் நாம் விரும்புகிறோம் நாகர்கள் பகுதி இந்தியாவுடன் இணைந்திருப்பதால் நமக்கு பொருளாதாரம் முதலிய எத்துறையிலும் சாதகமில்லை. எனினும் நம்மவர் இந்தியாவுடனேயே சேர்ந்திருக்க வேண்டுமென்பதுதான் நம் குறிக்கோள்.

"வன்முறைகளுக்குப் பணிந்து விட்டுக்கொடுப்பது என்பது மட்டும் ஒருநாளும் முடியாது. பயமுறுத்தல்களைக் கையாளும் நாகர்களுக்கு பணியவே மாட்டோம்.

"நாகர் மலைப் பிரதேசத்தில் 3 இலட்சம் மக்களே இருக்கிறார்கள். ஒரு மாவட்டத்திலுள்ள மக்கள் தொகையில் நாலில் ஒரு பங்கு கூட அது இல்லை பெரிய மாவட்டங்களில் எத்தனையோ இலட்சம் மக்கள் வசிக்கிறார்கள். இச்சிறு தொகையுள்ள மக்கள் வாழும் பகுதிக்குச் சுதந்திரம் கேட்பது பைத்தியக்காரன் செயலே போன்றதாகும். ஏராளமான வளம் இருந்தாலொழிய இன்று ஒரு பிரதேசத்தில் முன்னேற்றம் காண முடியாது. அப்படியிருக்க நாகர்கள் தனியாகப் பிரிந்தால், என்ன நன்மைகள் அடையக்கூடும்! நம்முடைய சொந்தச் சகோதர சகோதரிகளான அவர்கள் செழிப்புடன் வாழ்வதை நாம் விரும்புகிறோம் எனவே, அவர்கள் நன்மையைக் கருதியே அப்பகுதியிலுள்ள அட்டூழியச் செயல்களை ஒழித்து நல்லாட்சியை நிலைநாட்ட ஆவன செய்கிறோம்.

'நாகர்களுடன் சமரசம் என்ற பிரச்சினையே எழவில்லை. கலகக்காரர்கள் தங்கள் வன்முறைகளை கைவிடும்வரை யாருடனும் எந்தப் பேச்சும் நடைபெறாது. நாகர் அட்டூழியத்தை ஒடுக்க வேறு யாருடைய உதவியையும் தேடப் போவதுமில்லை. நம் படைகளுக்கு அவர்களது கொடுமையை அடக்கும் திறமை உண்டு."

கோழைத்தனத்திற்குச் சமாதானமா?

மாஸ்கோ, சூலை 2—

"'தவறுகள்' பல செய்திருந்த போதிலும், ஸ்டாலினை அவர் உயிரோடிருந்த காலத்தில் பதவியிலிருந்து நீக்க முயற்சிக்கப்பட்டிருந்தால் அது தோல்வியையே அடைந்திருக்கும்; ஏனெனில், மக்கள் ஆதரவு அத்தகு ஒரு முயற்சிக்குக் கிடைத்திருக்காது,"

என்று, சோவியத் கம்யூனிஸ்டு கட்சி இப்போது அறிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

"ஸ்டாலின் இழைத்த மிகப் பெரிய தவறுகள்கூட, ரஷ்யாவின் சமூக அமைப்பில் எந்தவித மாற்றத்தையும் உண்டு பண்ணவில்லை" என்றும் கட்சி அறிவித்துள்ளதாம்.

தமிழ் நாடு கோருவது குறுகிய மனப்போக்கானதாம்!

வெளிநாடுகளிலும், இந்தியா முழுவதிலும் தமிழர் பரவியிருக்கின்றனராம்!

பிரதேச இயக்கங்கள் அவர்களுக்கு தீங்கு பயக்குமாம்

கிருஷ்ணமாச்சாரியின் கீதாபதேசம்

குற்றாலம், சூலை 3—

"தமிழ் நாடு வேண்டும் — என்ற தீவிரமான, குறுகிய பிரதேச மனப்போக்கு இந்த நாட்டில் வளர்ந்து வருகிறது; இதை வளர்க்கும இயக்கத்தவர், தங்களைக் கடவுள் எதிர்ப்பு இயக்கத்தவர் என்றும் கூறிக்கொள்கின்றனர்.

"அரசியலோ, பொருளாதாரமோ, சமூகமோ எந்தத் துறைப் பிரச்சினையாயினும், அதனை, ஒழிப்பு நோக்குடன் அணுகினால் வெற்றி பெற முடியாது,"

என்று, மத்திய சர்க்கார் தொழில்-வர்த்தக இலாகா மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி கூறினாராம்.

"தமிழ் நாட்டிற்கும் தமிழர்களுக்கும் சிறப்பானதோர் எதிர்காலம் இருக்கிறது.

"பிஜி தீவுகள், தென்னாப்பிரிக்கா, மலேயா, பர்மா, இலங்கை இங்கெல்லாம் தமிழர்கள் இருக்கிறார்கள். இங்கு, தமிழர்களின் நலன்களுக்கு என்று கூறி ஏதேனும் குறுகிய பிரதேச இயக்கங்கள் தோன்றுமானால், அது, வெளிநாடுகளில் உள்ள தமிழர்களுக்கு தீங்கு இழைப்பதாகவே அமையும். இன்று இலங்கையில் குழப்பம் நிலவுகிறது; இலங்கைத் தமிழர்கள், தங்கள், நாட்டில் உள்ள இந்தியத் தமிழர் பற்றித் தாங்கள் கவலை கொள்ளத் தேவை இல்லை என்று கருதினார்கள்; விரோதம்கூடப் பாராட்டினார்கள்; ஆனால், இன்று அவர்களே பெரும் பிரச்சினைகளை எதிர் நோக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள். தமிழர்கள், இந்தியா முழுவதும் பரவிக் கிடக்கிறார்கள்; எந்த ஒரு பிரதேச இயக்கமும், அவர்களது நலன்களுக்கு குந்தகம் விளைவிப்பதாகவே அமையும்,"

என்றும், டி. டி. கிருஷ்ணமாச்சாரி பேசினாராம்!

காடு-கரம்பு நிறைந்த நிலங்களை வளமிக்க கழனிகளாக்க!

வடநாட்டில் பகீரத முயற்சி

மாநில அரசாங்கங்களுக்கு டில்லியின் துணை

பெப்சுவில், புதர்களும், காடுகளும் அடர்ந்த பிரதேசத்தில், பிரதிதினம் 100 ஏகரா நிலத்தை கனரக இயந்திரங்கள், திருத்திப் பண்படுத்தி வருகின்றன; அதாவது, உணவுத் தானியக் கணக்கில் அதிகப்படியாக நாள்தோறும் 800 மணங்கு தானியம் கிடைப்பதற்கு வகையேற்பட்டுள்ளது; இப்பிரதேசத்தின் நில மதிப்பு ஏகராவுக்கு ரூ 400 உயர்ந்துள்ளது.

இந்த நில மீட்சித் திட்டத்தை பெப்சு மாநில சர்க்கார், தனியார் நிறுவனங்களின் உதவியுடன் 1954-ல் ஆரம்பித்து வைத்தனர். இதுவரை 60 000 ஏகராவுக்கு மேற்பட்ட பிரதேசம் சாகுபடிக்கு இலாயக்குள்ளதாக ஆக்கப்பட்டிருக்கிறது இப்பிரதேசத்தில் ஒரு இலட்சம் ஏகரா நிலத்தைத் திருத்திப் பண்படுத்துவது இலட்சியமாகக் கொள்ளப்பட்டிருக்கிறது இது இன்னும் ஒரு வருட காலத்துக்குள்ளாக பூர்த்தியாகிவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது இதற்காக மொத்தம் ரூ. 75 இலட்சம் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தொகை முழுவதையும் மத்திய சர்க்கார், மாநில சர்க்காருக்குக் கடனாக வழங்கியுள்ளனர்.

தற்போதைய திட்டம் பூர்த்தியான பிறகும், பெப்சுவில் மேலும சுமார் 7 இலட்சம் ஏகரா நிலம் கரம்பு நிலமாக இருக்கும். இதில் ஒரு பகுதியை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் திருத்திப் பண்படுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியா முழுவதிலும் சாகுபடிக்கு திருத்தக்கூடிய கரம்பு நிலமாக 8,50,00,000 ஏகரா இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது இதில், முதலாவது திட்டக் காலத்தில் மொத்தம் 74 இலட்சம் ஏகராவைத் திருத்திப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டது. இரண்டாவது திட்ட காலத்தில் 35 லட்சம் ஏக்கராவை சாகுபடிக்குக் கொண்டுவருவது இலட்சியமாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. மத்திய—மாநில சர்க்கார்களின் டிராக்டர் நிறுவனங்கள் இந்த இலட்சியத்தை எய்துவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

1955 சூன் மாதம்வரை, மொத்தம் 50,000 ஏகரா காட்டுப் பிரதேசமும், 14,00 000 ஏகரா கான்ஸ் புல் அடர்ந்த பிரதேசமும் திருத்திப் பண்படுத்தப்பட்டன. இவ்வேலைகளுக்காக மொத்தம் ரூ 10 கோடி ஒதுக்கப்பட்டதில், ரூ 8 13 00,000 1951-55-ம் ஆண்டுகளில் செலவழிக்கப்பட்டது.

உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், மத்திய பாரத், போபால் ஆகியவை 54-55-ம் ஆண்டில் மட்டிலும் 30 000 ஏகரா காட்டுப் பிரதேசத்தையும், 1,87,000 ஏகரா கான்ஸ் புல் நிறைந்த பிரதேசத்தையும் மீட்டுள்ளன.

கிழக்கு பாக். மக்களுக்கு உணவுப் பொருள்

ரஷ்யா உதவுகிறது

சிட்டகான், சூலை 2—

கிழக்கு பாகிஸ்தான் மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக ரஷ்யா வழங்கிய 40,000 டன் உணவுப் பொருளையும், பாகிஸ்தானில் உள்ள ரஷ்யத் தூதுவர் ஐ எப். ஸ்பெட்ஜோ என்பார், கிழக்கு வங்க கவர்னரான பஜ்ஜுல்ஹக்கிடம் தந்துள்ளார்.

இந்தியாவில் அலுமினிய உற்பத்தி 1954-ல் 4,886 டன்னாக இருந்தது—1955-ல் 7,245 டன்னாக அதிகரித்தது.

இந்தியாவில் தொழில் துறைத் தகராறுகள்

எண்ணிக்கை நிலைபற்றி ஒரு விளக்கம்

புதுடில்லி, சூலை 3—

"இந்தியாவில், 1956 ஏப்ரலில், தொழில்துறை தகராறுகள் எண்ணிக்கை 136; புதிதாக அம்மாதத்தில் ஏற்பட்ட தகராறுகள் 100; அவைகளில் 52,863 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தார்கள். 136 தகராறுகளில் அடங்கிய 128 தகராறுகளில் 79,314 தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்தனர்; முந்திய மாதத்தில் சராசரி தகராறுகள் 147; அவைகளில் 1,35,053 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர்"

என்று, இந்திய சர்க்கார் தொழிலாளர் இலாகா அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதுடன், மேலும் கூறப்பட்டிருப்பதாவது :—

17 தகராறுகள் கதவடைப்புகள்; அவைகளில் 16,733 தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்தார்கள். சென்னையில் ஒரு கதவடைப்பு இருந்தது.

அம்மாதத்தில் 98 தகராறுகள் முடிவடைந்தன; தொழிலாளர்களுக்கு முழுமையிலுமோ அல்லது ஓரளவுக்கோ வெற்றி கிடைத்த தகராறுகள் 32; 43 தகராறுகளில் அவர்களுக்கு வெற்றி கிடைக்கவில்லை: 16 தகராறுகளில் பலன் நிச்சயமில்லை. 7-ல் பலன் தெரியவில்லை. புதிய 19 தகராறுகள் சம்பளம் பற்றியவையும்; 16 சிப்பந்திகள் பற்றியவையும்; 19 இதர காரணங்கள் பற்றியவையுமாகும்.

சீனக் கம்யூனிஸ்டுகள் ஆட்சியில் 'கவனக் குறைவு'கள் உண்டாம்!

தவறுகளை ஒப்புக்கொள்கிறார் சீனப் பிரதமர்

தொழிலாளர்கள் நிலைபற்றி விளக்கம்

மணிலா, சூலை 4—

கம்யூனிஸ்டு ஆட்சி பல தவறுகளைச் செய்திருப்பதாகவும், அது பெரும் அதிகாரத்தன்மை பெற்றதாக இருக்கிறது என்றும் பீப்பிங்கில் நடைபெற்ற தேசிய மக்கள் காங்கிரசின் கடைசிக் கூட்டத்தில், சீனப் பிரதமர் சூ-என்-லாய் கூறினாராம்.

"மேலே செல்லச் செல்ல, உண்மை நிலையை மறக்கும் அளவுக்கு, மக்களை விட்டு அகன்று நீங்கள் அதிகாரத்தைக் கைப்பற்றக் கூடும்" என்று, இரண்டு வாரங்கள் நடைபெற்றதும், சூன் 30-ந் தேதி முடிவடைந்ததுமான மாநாட்டுப் பிரதிநிதிகளிடம் அவர் ஒப்புக் கொண்டாராம்.

வேலை வசதிகளையும், கூலியையும் மாற்றி அமைக்கும் சட்டமியற்ற ஆட்சி கவனக்குறைவாக இருந்தது என்றும், பல ஆயிரக் கணக்கான தொழிலாளிகளுக்கு வீட்டு வசதிகள் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டாராம்.

தொழிலாளிகளின் தினசரி வேலை முடிந்ததும், நீண்ட நேரத்துக்கு அவர்கள் கம்யூனிஸ்டுக் கொள்கையைப் படிக்க வேண்டியிருக்கிறது என்றும் பாதுகாப்பு, சுகாதார வசதிகள் பற்றி தொழிலாளிகள் புகார் தெரிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டாராம்

இந்தக் காங்கிரஸ் கூட்டத்தில், தம் சொந்தச் செய்கைகளை குற்றஞ் சாட்டும் கம்யூனிஸ்டுச் சீன நிர்வாகிகளின் நீண்ட பட்டியலில் பிரதமரும் இவ்வாறு சேர்ந்துகொண்டார்.

குற்ற விசாரணை நடத்துவதற்கு பீப்பிங் பின்பற்றும் முறைகளில் பல தவறுகள் இருப்பதாகவும், நிரபராதிகள் தவறாகக் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டுள்ளனர் என்றும் பிராசிகியூட்டர் சாங் டிங்-செங் ஒப்புக்கொண்டார். ஆயினும், புரட்சியை எதிர்ப்பவர்கள் எனச் சொல்லப்படுபவர்களுக்கு தண்டனை அளிக்கும்பொழுது, சில சமயங்களில், ஆட்சியினர் மிகவும் தாட்சண்யத்துடன் நடந்து கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

சீனா, தாய்லாந்திலிருந்து அரிசி இறக்குமதி

இந்திய சர்க்கார் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனராம்

புதுடில்லி, சூலை 3—

சீனாவிலிருந்து இரண்டு இலட்சம் டன் அரிசி இறக்குமதி செய்வது பற்றி சீன அரசினருடன் இந்தியப் பேரரசு பேச்சு நடத்தி வருவதாக அதிகாரபூர்வமாக தெரியவருகிறது.

தாய்லாந்திலிருந்தும் அரிசி வாங்குவதற்குப் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. எவ்வளவுடன் அரிசி வரவழைப்பது என்று இன்னும் தீர்மானமாகவில்லை.

இந்தியா இவ்வாண்டு மூன்று இலட்சம் டன் அரிசி இறக்குமதி செய்யும். வேறு இடங்களிலிருந்து மேலும் இரண்டு இலட்சம் டன் அரிசி வாங்க அரசியலார் பேச்சு நடத்திக் கொண்டிருக்கின்றனர். அடுத்த ஐந்தாண்டுகளில் பர்மாவிலிருந்து 20 இலட்சம் டன் அரிசி இறக்குமதி செய்ய பர்மா அரசினருடன் இந்தியப் பேரரசு ஏற்கனவே 5 ஆண்டு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறது. இதில் 45,000 டன் இத்திங்கள் இறுதிக்குள் இந்தியா வந்து சேரலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

அரிசி விலையேற்றத்தைத் தடுக்கவும், நெருக்கடிகளைத் தவிர்க்கவுமே அரிசி இறக்குமதி செய்யப்படுகிறது.

அடுத்த ஐந்தாண்டுகளில் 30 இலட்சம் டன் கோதுமை இறக்குமதி செய்ய அமெரிக்காவுடன் இந்தியா பேச்சு நடத்தி வருவதாக இந்திய உணவு அமைச்சர் கூறியிருந்தார். ஆகவே, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளிலேயே திட்டக் குழு நிர்ணயித்துள்ள 60 இலட்சம் டன் உணவு தானியத்தை இறக்குமதி செய்ய இந்திய விவசாய, உணவு இலாகா எண்ணியுள்ளது என்பது தெளிவாகிறது.

அமெரிக்கத் தொழில் நுட்ப உதவி

இந்தியாவுக்குத் தரப்படும் விவரம்

புதுடில்லி, சூலை 3—

இந்திய சர்க்காருக்கும்—அமெரிக்கத் தொழில் நுட்ப கூட்டுறவு நிறுவனத்துக்குமிடையே மேலும் மூன்று தொழில் நுட்ப உதவி ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டிருக்கின்றன.

அவ்வொப்பந்தங்களில் ஒன்றின்படி, தேசிய நீர் விநியோக வேலைகளுக்கும், சுகாதாரத் திட்டத்துக்கும் தேவைப்படுகிற இரும்புக் குழாய்களை வாங்குவதற்காக இந்தியாவுக்கு அமெரிக்காவிடமிருந்து 7,24,697 டாலர் கிடைக்கும். இந்தக் காரியத்துக்காக அமெரிக்கா இவ்வாண்டு ஒதுக்கியுள்ள தொகை இதோடு சேர்த்து 15 இலட்சம் டாலருக்குமேல் ஆகிறது

மற்ற இரு ஒப்பந்தங்களின்கீழ் சம்பல் திட்டம் சம்பந்தமாக இயந்திர சாதனங்கள் வாங்குவதற்காக 7,50,000 டாலரும், கல்கத்தாவிலுள்ள இந்திய புள்ளிவிவரத் தகவல் நிலையத்தில் தொழில்துறை நூல் நிலையம் ஒன்றை ஏற்படுத்துவதற்காக 2 800 டாலரும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

உலகத்திலுள்ள கண்டங்கள் நகருகின்றனவா?

'சான்றுகள் உண்டு' என்கிறார் பிரிட்டிஷ் பேராசிரியர்

ஆண்டிற்கு இரண்டு அங்குலம் வீதம் வடதுருவத்தை நோக்கி பிரிட்டன் நகர்ந்துகொண்டிருக்கிறதாம்!

அதுமட்டுமின்றி, கடந்த 15-கோடி ஆண்டுகளில் ஏறக்குறைய 34 டிகிரி திரும்பியுமிருக்கிறதாம்!

நூற்றாண்டுக்கு மூன்று மீட்டர் அல்லது ஏறக்குறைய 117 அங்குல வேகத்தில் கண்டங்களும் நகர்ந்துகொண்டிருக்கின்றனவென்றும், இதில் பிரிட்டன்தான் அதிக முன்னேற்றமாக நூற்றாண்டுக்கு 234 அங்குலங்கள் வீதம் நகர்ந்துகொண்டிருக்கிறதென்றும், பிரிட்டிஷ் விஞ்ஞான-தொழில் நுணுக்கக் கல்லூரி பேராசிரியர் பி. எம். எஸ் பிளாக்கெட், நோபல் பரிசாளர் மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டுவிட்டு, மேலும் சொன்னார் :—

"உலகத்திலுள்ள கண்டங்கள் நகர்ந்ததற்கு எடுத்துக்காட்டு உண்டு இந்தியா, ஆப்பிரிக்கா போன்ற கண்டங்கள் இப்போது பூமத்திய ரேகை மண்டலத்திலுள்ளன; ஆனால், அவை ஒரு காலத்தில் தென்துருவ மண்டலத்திலிருந்தன; முழுதும் பனிமுடி தரித்திருந்தன.

"20 கோடி ஆண்டுகளுக்குமுன் ஐரோப்பாக் கண்டம் பூமத்திய ரேகை மண்டலத்திலிருந்தது ஐரோப்பாவிலுள்ள உஷ்ண மண்டல, சமஉஷ்ண மண்டல நிலக்கரிச் சுரங்கங்கள் அதற்கு எடுத்துக் காட்டுகளாகும்.

"20 கோடி ஆண்டுகளுக்குமுன் வட துருவம்கூட நேர்வடக்கில் இல்லை—சைபீரியாவுக்குக் கிழக்கிலும், ஜப்பானுக்கு வடக்கிலும் வடபசிபிக் மகாசமுத்திரத்திலிருந்தது

"குறுகிய ஆண்டுகளில் விஞ்ஞான ஆராய்ச்சியின் பயனாக 200 கோடி ஆண்டுகளுக்கு முற்பட்ட நிலத்தின் சரித்திரத்தைக் கண்டுபிடித்து கண்டங்கள் நகருவதுபற்றிய தத்துவத்துக்குப் பலமான சான்றுகள் கிடைத்துள்ளன."

இம்மாநாட்டில் இந்தியாவின் சார்பில் திரு சி. வி. இராமன் கலந்துகொண்டார்.

திருட்டு ஓட்டு பதிவு செய்வதைத் தடுக்க!

தலைமைத் தேர்தல் அதிகாரியின் சிரம சாத்தியமான வழி!

திருட்டு ஓட்டுப் போடுவதைத் தவிர்ப்பதற்கு என்று கூறி, சிரம சாத்தியமான வழி ஒன்றை இந்தியத் தேர்தல் அதிகாரிகள் யோசித்து வருவதாகத் தெரியவருகிறது.

ஒருவர், பிறிதொருவரின் வாக்குச் சீட்டை, தான்தான் குறிப்பிட்ட வாக்காளர் என்று கூறி திருட்டுத்தனமாக ஓட்டுப் போடுவதைத் தவிர்ப்பதற்காக, 'வாக்காளர் அனைவருக்கும் அவர்களின் புகைப் படங்களடங்கிய அடையாளச் சீட்டுக்கள் தேவை என்று கோருவது'—என்ற திட்டம் பற்றி, இந்தியாவின் பிரதம தேர்தல் அதிகாரியான சுகுமார் சென், மேற்கு வங்க முதல்வர் டாக்டர் பி. சி. ராயுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகக் கூறப்படுகிறது.

இது சாத்தியமா? இதற்கு எவ்வளவு செலவாகும்? இதற்காக எப்படிப்பட்ட ஒரு இலாகா அமைக்க வேண்டிவரும்?— என்பதை எல்லாம் கணக்கிட்டுக் கூறுமாறு, மாநில சர்க்காரை சுகுமார் சென் அவர்கள் கேட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

கேட்டீரா சேதி!

ரெய்ப்பூர், சூலை 8—

பி. சோ. கட்சித் தலைவர் அசோக் மேத்தாவும், மற்றும் பலரும் காங்கிரசில் சேர்க்கடுமென சௌகார் பல்லைக் கழகத் துணை வேந்தர் பண்டித டி. பி. மிஸ்ரா என்பார் கூறியுள்ளார்.

இப்பொழுதுள்ள நிலைமையில் பி. சோ. கட்சியிலிருந்துகொண்டே தேசிய நிர்மாணத் திட்டங்களுக்கு உதவ முடியாது என்ற முடிவுக்கு வந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் கல்வியறிவு வளர்ந்து வருகிறதாம்

அதற்கொப்ப தேர்தல்முறை மாறுமாம்

தலைமைத் தேர்தல் அதிகாரி தகவல்

கல்கத்தா, சூன் 3—

இப்போதுள்ள வாக்களிக்கும் முறையை சுலபமானதாக ஆக்குவது என்ற பெயரில், புதிய முறை ஒன்று பற்றி, இங்கு கூடிய கிழக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த ஆறு மாநிலங்களின் பிரதம தேர்தல் அதிகாரிகள் விவாதித்தனர் என்று கூறப்படுகிறது.

ஓட்டுச் சீட்டுக்களில் ஒரு குறிப்பிட்ட தொகுதியில் போட்டியிடும் எல்லா அபேட்சகர்களின் பெயர்களையும் அவர்களது சின்னங்களுடன் அச்சிட்டுவிடுவது என்றும், வாக்காளர்கள் தாங்கள் விரும்பும் அபேட்சகரின் பெயருக்கு எதிரே ஒரு குறியிடுவதின் மூலம் வாக்களிக்கச் செய்வது என்பதுமே விவாதிக்கப்பட்ட புதிய முறையாகும்.

இந்த முறைப்படி வாக்குப் பதிவு நடைபெறுமானால், ஒரே ஒரு வாக்குப் பெட்டிதான் வைக்கப்படும் என்றும், முன்போல ஒவ்வொரு அபேட்சகரின் சின்னம் பொறித்த தனித் தனிப் பெட்டி இருக்காது என்றும் கூறப்பட்டிருக்கிறது

"உலகம் முழுதும் பின்பற்றப்படும் இந்த முறையே, கல்வியறிவு வளர்ந்து வரும் நமது நாட்டிலும், ஒரு தரமான முறையாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டி வரும்; இந்த முறையினால், ஓட்டுக்களைத் திருடுவதற்குரிய சந்தர்ப்பங்கள் அகலும் என்பதுடன், பெட்டிகளின் எண்ணிக்கை குறையவும் வாய்ப்பு ஏற்படும்," என்று, பிரதம தேர்தல் கமிஷனரான சுகுமார் சென் தெரிவித்திருக்கிறாராம்.

"இந்த முறையை, மாநில சர்க்காரகள் ஏற்றுக்கொள்ளுமானால், துவக்கத்தில், பெரிய நகரங்களில் இது அமுல் செய்யப்படும்; இன்றேல், ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில், சம்மந்தப்பட்ட மாநில சர்க்காரைக் கலந்துகொண்டு, இந்த முறை அமுல் செய்யப்பட்டு பரிசோதிக்கப்படும்.

"இப்போது, இதனை நாம் துவக்கிவிட விரும்புகிறோம். இது வெற்றி பெறுமானால், பின்னர் எல்லாப் பிரதேசங்களுக்கும் இது விரிவாக்கப்படும்," என்றும் சென் அறிவித்துள்ளாராம்.

'கோபாலனின் புகார் ஆதாரமற்றது'

டில்லி அதிகாரி முன்னிலையில் விசாரணை

மக்களிடை 'மாச்சரியத்தை' வளர்க்கலாமா?' — நிதிமந்திரி சுப்பிரமணியம் விளக்கம்

சென்னை, சூலை 4—

"தோழர் ஏ. கே. கோபாலன் புகார் செய்திருந்ததைப் போல, மலபார் காடுகளில் ஒரு மரம்கூட வெட்டப்படவில்லை,"

என்று, நிதிமந்திரி சுப்பிரமணியம் மறுத்துரைத்திருக்கிறார்.

"வளராத தேக்கு மரங்களை சென்னை சர்க்கார் வெட்டிவிடுவதாக தோழர் கோபாலன் டில்லி சர்க்காருக்குப் புகார் அனுப்பி இருந்தார்.

"மத்திய சர்க்காரின் காட்டிலாகா உதவி இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ஒருவர், கோவை கல்லூரியின் பட்டமளிப்பு விழாவிற்கு வந்திருந்தபோது, மலபார் காடுகளுக்குச் சென்று விசாரணை நடத்திவருமாறு, கோபாலனின் புகார் மீது டில்லி சர்க்கார் பணித்திருந்தனர். அதன்படி அந்த டில்லி அதிகாரி மாநில காட்டிலாகா உயர்தர அதிகாரியுடன் சேர்ந்து, புகாருக்கு உட்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டபோது, ஒரு மரம்கூட வெட்டப்படவில்லை என்பதைக் கண்டுகொண்டார்.

"எனவே, ஆதாரமில்லாத புகார்களைக் கிளப்புவது, இரு மாநில மக்களிடையேயும் மாச்சரியத்தைத்தான் வளர்க்கும்," என்றும் நிதிமந்திரி, தோழர் கோபாலனுக்குச் சுடச்சுட பதிலளித்திருக்கிறார்.

"இதேபோல, திரு-தமிழகத்திலிருந்தும் புகார்கள் வந்துள்ளன இப்போது அந்தப் பகுதிகளில் ஓடிக்கொண்டிருக்கும் பஸ் வண்டிகள் எல்லாம் எடுத்துக்கொள்ளப்பட்டு, அத்தனையும் பழைய வண்டிகளாகவே விடப்படுகின்றன; மின்சார இலாகா முதலிய பல இலாகாக்களைச் சேர்ந்த கனரக இயந்திரங்கள் எல்லாம் திருவனந்தபுரத்திற்கு அகற்றப்படுகின்றன என்று புகார் கிளம்பியுள்ளது.

"மேலும், அங்குள்ள காடுகளில் வெட்டப்படும் மரங்கள் இதுவரை நாகர்கோவிலில் சேமித்து வைக்கப்படும் என்றும் இப்போது அவை திருவனந்தபுரத்திற்கு அகற்றப்படுகின்றவும் புகார் செய்யப்பட்டிருக்கிறது.

"இந்தப் புகார்களுக்கும், ஆதாரம் இருக்குமென நான் நம்பவில்லை," என்றும் மந்திரி சுப்பிரமணியம் கூறியிருக்கிறார்.

திரு-கொச்சி சர்க்காரோ, மக்களோ தவறாகப் புரிந்துகொள்ளக் கூடிய எந்தக் காரியத்தையும் சென்னை சர்க்கார் செய்யமாட்டார்கள் என உறுதி கூறுகிறேன்," என்றும் மந்திரி கூறியிருக்கிறார்

'புகார் கூறும் அளவுக்கு இடந் தாராதீர்'

சென்னை, சூலை 3—

மாநிலச் சீரமைப்புத் திட்டத்தின்படி, மற்ற மாநிலங்களுக்கு மாற்றப்படவிருக்கும் பகுதிகளிலுள்ள சொத்துக்கள் பிரச்சினையில் முன்னெச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டுமென்று, அதிகாரிகளுக்கு சென்னை சர்க்கார் உத்திரவு பிறப்பித்துள்ளனர்.

யூகங்கள் அல்லது சந்தேகங்களுக்கு இடம் தரும் வகையில் அதிகாரிகள் நடந்துகொள்ளக் கூடாதென்றும், எந்தச் சந்தர்ப்பத்திலும் புகார்களுக்கு இடம் தரும் வகையில் அதிகாரிகள் நடந்துகொள்ளக் கூடாதென்றும் இந்த உத்தரவு கூறுகிறது.

நீதிவழங்கும் அமைப்பில்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கவிடமிருந்து, பணம் திரட்டும் நோக்கம் அரசாங்கத்திற்கு இருந்துவருகிறது என்றுதான், அதன் நடைமுறையைக் கொண்டு எண்ணவேண்டியதாக இருக்கிறது.

"நடைமுறையில் இருந்து வரும் சிவில்—கிரிமினல் சட்டத் தொகுப்புகளைக் குறுக்குவதின் மூலம், தொடரும் வழக்குகளில் முடிவு காண்பதில் ஏற்படும் கால நீடிப்பைக் குறைத்துவிட முடியும் எனக் கருதப்படுகிறது.

"விரிவான சட்டத் தொகுப்புகளை நடைமுறையில் கொண்டிருப்பதற்கே, நீதியில் தவறு ஏற்படுவதோ, நீதி பெறுவதில் ஒருவருக்கு எதிராக மற்றொருவர் சலுகை பெற்றுவிடுவதோ கூடாது என்பதே காரணமாகும். இருந்துவரும் சட்டத் தொகுப்புகள், தோல்வி, நீதியை நெருங்கவிடாது பாதுகாத்துவரும் கவசமாகும். எனவே, சட்டத் தொகுப்புக்களை எளிதாக்குவது, சட்டத்தின் பிடியிலிருந்து கயவர்கள் தப்புவதற்கே உதவும்."

"கடந்த இருபது ஆண்டுக் காலமாக சட்டங்கள் மிக மிகத் துரிதமாக இயற்றப்பட்டு வருகின்றன. இயற்றப்பட்ட சட்டங்களில் உடனுக்குடன் திருத்தங்களும் செய்யப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் சட்டமியற்றிய பதினைந்து தினங்களுக்குள்ளாகக்கூட திருத்தங்கள் செய்யப்படுகின்றன. புதிய ஜனநாயகம் பிறந்திருப்பதும், சட்டமியற்றுவதில் போதிய பயிற்சி பெறாததும், அக்குறைபாட்டிற்குக் காரணமாக இருக்கக்கூடும். ஆனால், முக்கியமான காரணமாக இருப்பது சட்டமியற்றுவதில் வழக்கறிஞர்கள் அக்கறை காட்டாததேயாகும். தங்களைவிட ஜனநாயகம் விரைந்து செல்லுகிறது என்ற நினைப்பை வழக்கறிஞர்கள் கொண்டுள்ளார்கள் போலும்!"

திருக்குறள் வகுப்பு

சென்னை — பெத்துநாய்க்கன் பேட்டை தாய்மார் கழகச் சார்பில் 7—7—56 பிற்பகல் 2½ மணிக்கு மேல் சென்னை முத்துக்கிருஷ்ணன் தெரு, 15-ம் எண்ணுள்ள இல்லத்தில், திருக்குறள் வகுப்பு நடைபெறும். பேராசிரியர் மயிலை-சிவ. முத்து அவர்கள், 'மடியின்மை' என்பது குறித்துப் பேசுவார்.

இலங்கைத் தமிழர் அறப்போருக்கு ஆதரவு

சென்னையில் மாபெரும் கூட்டம்

கோகலே மண்டபத்தில்
6—7—56 மாலை 6 மணிக்கு

தலைவர்:
எச். டி. இராசா, எம்.பி.

பேசுவோர்:
ம. பொ. சிவஞானம்
என். வி. நடராசன்
ப. ஜீவானந்தம்
எஸ். விசயலட்சுமி
கே. விநாயகம்
கே. அருணாசலம்
ஏ.வி.பி. ஆசைத்தம்பி

கழகக் கூட்டம்

★

காங்கயம்
மதார் சாயபு பேட்டை
7-7-56 மாலை 6-30 மணிக்கு

தலைவர்:
எம். வேலுசாமி

பேசுவோர்:
டி. கே. சீனிவாசன்
கோவை-செழியன்

★

அரியலூர்
பெட்ரோல் நிலைய எதிரில்
7-7-56 மாலை 6-30 மணிக்கு

தலைவர்:
எம். மாரிமுத்து

பேசுபவர்:
ஏ. வி. பி. ஆசைத்தம்பி

தி. மு. கழக படிப்பக நிதிக்காக சிறப்புச் சொற்பொழிவு

★

8—7—56 ஞாயிறு காலை 9-மணிக்கு, கணபதி டாக்கீசில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் 'விடுதலை விழா' என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். இசைமுரசு நாகூர் அனீபா, தோழியர் ஜி. கஸ்தூரி இன்னிசை வழங்குவர்.

நன்கொடை அணா 4

—செங்கற்பட்டு தி. மு. கழகம்

சென்னை அறிவு வளர்ச்சி மன்ற 3-ம் ஆண்டு விழா

6—7—56 மாலை 6 மணிக்கு, சென்னை - ஆயிரம் விளக்கு அறிவு வளர்ச்சி மன்ற மூன்றாம் ஆண்டு விழா, ஆயிரம் விளக்கு பஸ் நிலையம் அருகில், தோழர் முல்லைசத்தி தலைமையில் நடைபெறும். தோழர்கள் மு. கருணாநிதி, புலவர் நன்னன் சொற்பொழிவாற்றுவர்.

மணி அரசு மாணவர் மன்ற ஆண்டு விழா

7—7—56 மாலை 5 மணியளவில், சென்னை - 21, கொல்லவாரி அகிரகாரம் ரோடு, எண். 78-ல், மேற்படி மன்ற இரண்டு ஆண்டு துவக்க விழா, திரு. ஆல்பிரட் ஜே பாக்கியநாதன் தலைமையில் நடைபெறும். புலவர் பு. செல்வராசனார் பேசுவார்.

மாணவர் இலக்கிய மன்றத் துவக்க விழா

6—7—56 மாலை 3-30 மணியளவில், இராயபுரம் தூய இராயப்பர் உயர்நிலைப் பள்ளி மண்டபத்தில் திரு. ஏ. ஜே. ஸ்தனிஸ்லாஸ் தலைமையில் மேற்படி மன்றத் துவக்க விழா நடைபெறும். தோழர் கண்ணதாசன், புலவர் கி. தியாகராசன், மதிவாணன் ஆகியோர் 'ஒழுக்கமே விருப்பம், நல்கும்' என்ற பொருள் பற்றிப் பேசுவர்.

சென்னை மாநில 4-வது

இரும்பு வர்த்தகர் மாநாடு

1956 ஜூலை 7, 8-ம் தேதிகளில்
தூத்துக்குடியில் நடைபெறும்

மாநாட்டுத் திறப்பாளர்:
சென்னை நிதி அமைச்சர்
திரு. சி. சுப்ரமணியம்
அவர்கள்

மாநாட்டுத் தலைவர்:
சென்னை தொழிலதிபர்
திரு. எஸ். அனந்தராமகிருஷ்ணன்
அவர்கள்

★

தூத்துக்குடி இரும்பு வர்த்தகர் சங்கம்
25-ம் ஆண்டு வெள்ளி விழா வைபவம்

கல்கத்தா, டாடா இரும்பு கம்பெனி விற்பனை மானேஜர்,
திரு. கே. ஜே. கிளீட்டஸ்
அவர்கள் தலைமையில் நடைபெறும்

★

இரும்பு வியாபாரிகள் அனைவரும் வருக!

சென்னை - ஆந்திரா எல்லைத் தகராறு

மாநில புது அமைப்பிற்குப் பிறகே தீர்வுகாண முடியுமாம்

ஆந்திர சர்க்கார் நிலை விளக்கம்

கர்னூல், சூலை 4—

சென்னை - ஆந்திரா எல்லைத் தகராறுகளைத் தீர்ப்பதற்கு இப்போது நேரடியாகப் பேச்சு வார்த்தைகள் நடத்துவதைத் தாங்கள் விரும்பவில்லை என்று ஆந்திரா சர்க்கார் சென்னை சர்க்காருக்குத் தெரிவித்திருப்பதாகக் கருதப்படுகிறது. ஆந்திர சர்க்காரிடமிருந்து சென்னை முதன் மந்திரிக்கு, சென்ற வாரம் வந்த கடிதத்தின் முக்கிய கருத்து இதுதான் என்றும் கூறப்படுகிறது.

ஆந்திரா - சென்னை மாநிலங்களிடையே உள்ள எல்லைப் பிரச்சினைகள் முக்கியத்துவம் வாய்ந்ததில்லை என்றும், மாநிலங்கள் சீரமைப்பின் விளைவாக நாடு முழுவதும் இதே மாதிரியான பிரச்சினைகள் எழத்தான் செய்யுமென்றும், எனவே, இது போன்ற பிரச்சினைகளில் எல்லாம் இந்திய சர்க்காரின் முடிவுக்காக காத்திருப்பது விரும்பத்தக்கது என்றும் ஆந்திர சர்க்காரின் கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

கீழ்க்கண்ட காரணங்களால் ஆந்திர சர்க்கார் நேரடிப் பேச்சுகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கருதுவதாகக் கூறப்படுகிறது:—

(1) மாநில சீரமைப்புக்குப் பிறகு, மாநிலங்களின் அமைப்பு பற்றித் தெளிவாகத் தெரியும்.

(2) மாநிலங்கள் இணைப்பு, எல்லைப்புப் பிரச்சினைகளில் ஈடுபட்டிருக்கும் இந்தச் சமயத்தைவிட இன்னும் அமைதியான சூழ்நிலையில் எல்லை மாறுதல்களைச் செய்யலாம்.

(3) எல்லை மாறுதல்கள் சம்பந்தமான கொள்கைகளை இந்திய சர்க்கார் இன்னும் இறுதியாக வகுத்தாகவேண்டும்.

(4) ஆந்திரா—சென்னைஎல்லைப் பிரச்சினைகள் உடனடியான பரிகாரம் காணவேண்டிய அளவுக்கு அவ்வளவு விசேடத்தன்மை வாய்ந்தவை அல்ல; மற்ற மாநிலங்களின் எல்லை மாறுதல்களைப் பரிசீலிக்கும் போது ஆந்திரா—சென்னை எல்லைப் பிரச்சினைகளையும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளலாம்.

(5) ஆந்திரா விஷயத்தில் எல்லை மாறுதல்கள் சென்னை மாநிலத்துடன் மட்டும் சம்மந்தப்பட்டதல்ல; மைசூர், ஒரிசா, மத்திய பிரதேசம் போன்ற மற்ற மாநிலங்களுடனும் சம்பந்தப்பட்டவை.

எல்லை உரிமைகளைத் தீர்மானிக்கும்போது தாலுகாதான் ஒரு 'யூனிட்'டாக இருக்க வேண்டுமென்றும், தாலுகா விஷயத்திலும் கூட குறிப்பிட்ட மொழி பேசுவோர் 70 சதவிகிதம் 'மெஜாரிட்டி' யாக இருந்தால்தான் அந்தப் பிரதேசத்தை சம்பந்தப்பட்ட மாநிலத்திற்கு மாற்ற வேண்டுமென்றும் மத்திய சர்க்கார் கூறியுள்ளது. இந்த யோசனையை ஏற்றுக்கொள்வதாக இருந்தால், ஆந்திராவையும் —சென்னையையும் பொறுத்தவரையில் தற்போதைய நிலையே நீடிக்கும்.

மு. கருணாநிதி

சுற்றுப்பயணம்

சூன் 26: ஸ்ரீவைகுண்டம்
27: முக்கூடல்
28: ஓய்வு
29: இராசபாளையம்—
இரவு — சத்திரப்பட்டி
30: சங்கரன்கோயில்

(இவ்வூர்களின் நிகழ்ச்சிகளில் தோழர் மதுரை முத்து அவர்களும் கலந்துகொள்வார்.)

12,000 ஏக்கர் நிலம் பாசன வசதிபெறும்

திருச்சி மாவட்ட கால்வாய் திட்டத்திற்கு சர்க்கார் அனுமதி

சென்னை, சூலை 4—

திருச்சி மாவட்டத்தில், கட்டளை மேல்கால்வாய் திட்டத்திற்கு, சர்க்கார் ரூ. 1'56,35,000 அனுமதித்துள்ளனர். இத்திட்டம் பூர்த்தியானால் 12,000 ஏக்கர் நிலம் பாசன வசதியைப்பெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம் ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

கோவைக்கு பொதுச்செயலாளர் வருகை

★

"15—7—66-ம் நாள் மும்முனைப் போராட்ட நாளையொட்டி, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கோவை வருகிறபடியால், அன்றைய நாளில் நகரில் எல்லா வார்டுகளிலும் கழகத் தோழர்கள் கொடியேற்று விழா ஆற்றுவதுடன், அன்று மாலை 4 மணிக்கு நகர கழகத்திலிருந்து புறப்படும் ஊர்வலத்திலும் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

"மாலை 6 மணிக்கு சிதம்பரம் பூங்காவில் பொதுக்கூட்டம் நடைபெறும்,"

என்று, கோவை நகர தி மு க. செயலாளர் சே. அ. இராசமாணிக்கம் அறிவிக்கிறார்.